# நிதியியல் விழிப்புணர்வு செய்திகள்

## நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை

## மத்திய அலுவலகம்

# Financial Awareness Messages (FAME)

## FIDD, Central Office



**பொறுப்புத் துறப்பு**
இந்த கையேடு நிதியியல் கல்வி பற்றி அறிந்து கொள்ளவும், கற்பிப்பதற்குமான செய்திகளைக் கொண்டது. (இந்த புத்தகம்) குறிப்பிட்ட நிதியியல் பொருட்கள் / சேவைகளை பரிந்துரைத்துப் படிப்பவரிடம் தாக்கம் ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது அல்ல.

**நகல் உரிமை**
இப்புத்தகம் உருவாக்கியவர்களுக்கு முறையான அங்கீகாரம் அளிக்கும் பட்சத்தில் இவற்றைக் கையாண்டு கொள்ளலாம்.

**முதல் பதிப்பு – அக்டோபர் 2016**

**இரண்டாவது பதிப்பு – நவம்பர் 2016**

**இந்திய ரிசர்வ் வங்கியால் அச்சிடப்பட்டது.**

**Reserve Bank of India**
**இந்திய ரிசர்வ் வங்கி**
இந்தியாவின் மைய வங்கி

**நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை**
10-வது தளம், ஷாஹித் பகத்சிங் மார்க்
கோட்டை, மும்பை 400 001

# பொருளடக்கம்


| | | பக்கம் எண் |
|---|---|---|
| செய்தி – 1 | வங்கிக் கணக்கு ஆரம்பிக்கும்பொழுது சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள் (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் – Know Your Customer - KYC) | 2 |
| செய்தி – 2 | வரவு/செலவு (பட்ஜெட்) திட்டமிடுதல் - சேமிப்பு - அவசியத் தேவைக்கு கடன் வாங்குதல். | 3 |
| செய்தி – 3 | உங்களது வைப்பு மற்றும் உங்களது வைப்புக் கணக்குகளை அறிந்து கொள்ளுங்கள். | 4 |
| செய்தி – 4 | கடன்களை உரிய நேரத்தில் திருப்பி செலுத்தி நல்ல கடன் மதிப்பெண்ணை பராமரிக்கவும். | 5 |
| செய்தி – 5 | கேட்பு வரைவோலைகள் மற்றும் காசோலைகளுக்கு விடை கொடுங்கள், மின்னணு வசதி மூலம் பணத்தைப் பெறுவதையும், மாற்றுவதையும் தொடங்குங்கள். | 6 |
| செய்தி – 6 | உங்கள் வாயிற்படியில் அல்லது உங்களுக்கு வீட்டின் அருகாமையில் வங்கி சேவைகள். | 7 |
| செய்தி – 7 | வங்கிகள் மற்றும் வங்கிக் குறைதீர்ப்பாளரிடம் உங்களது புகார்களை எப்படி அளிப்பது ? | 8 |
| செய்தி – 8 | இலவசமாக எதுவுமே கிடைக்காது – ஏமாறாதீர்கள். | 9 |
| செய்தி – 9 | சிக்கலின்றி தானியங்கி பணம் வழங்கும் இயந்திரப் (ATM) பயன்பாட்டுக்கு கவனத்தில் கொள்ளுங்கள். | 10 |
| செய்தி – 10 | பாடுபட்டு சம்பாதித்த பணத்தை, பதிவு பெற்ற அமைப்புகளில் மட்டுமே முதலீடு செய்யவும். | 11 |
| செய்தி – 11 | தவறான விற்பனை - பணத்தை உங்கள் கணக்கில் வரவு வைக்க நீங்கள் வங்கிக்குச் செல்லும்பொழுது, உங்களுக்குப் புரியாத காப்பீட்டுத் திட்டத்தை உங்கள் கையில் கொடுத்தால்... | 12 |




# செய்தி 1

## வங்கிக்கணக்கு ஆரம்பிக்கும் பொழுது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் (உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்ளுங்கள் - Know Your Customer - KYC)

- ஒரு அடையாளம் மற்றும் இருப்பிடச் சான்றுக்கான ஒரு நகல் மற்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் ஆகியவை ஒரு வங்கிக் கணக்கைத் திறக்கப் போதுமானது.




- உங்களது ஆதார் அட்டை, ஓட்டுனர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, கடவுச் சீட்டு அல்லது தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத சட்ட (National Rural Employment Guarantee Act - NREGA) அட்டை ஆகியவை அடையாளம் மற்றும் இருப்பிடம் ஆகிய இரண்டிற்குமான சான்றாகிறது. வருமான வரித்துறையின் நிரந்தரக் கணக்கு எண் (PAN) அடையாளச் சான்றாக மட்டுமே விளங்குகிறது.
- நீங்கள் வங்கியிடம் சமர்ப்பிக்கும் ஆதாரச் சான்றில் உள்ள முகவரி, தங்களுடைய தற்போதைய முகவரியாக இல்லையென்றால், உங்களது தற்போதைய முகவரிக்கான சுய சான்றிதழை கையெழுத்திட்டுக் கொடுத்தால் போதுமானது.
- "அடையாள மற்றும் இருப்பிடச்சான்று" இல்லாமலே நீங்கள் வங்கியில் "சிறு கணக்கு" என்று சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். இதற்கு உங்களது சமீபத்திய புகைப்படம் மற்றும் கையெழுத்து தேவை. உங்கள் கணக்கில் ரூ.50,000/- வரை வைத்துக் கொள்ளலாம். ஒரு மாதத்திற்கு ரூ.10,000/- வரை எடுத்துக் கொள்ளலாம். ஒரு நிதியாண்டில் மொத்த வரவு ரூ. 1 லட்சம் வரை இருக்கலாம்.









# செய்தி 2

## வரவு/செலவு (பட்ஜெட்) திட்டமிடுதல் - சேமிப்பு - அவசியத் தேவைக்கு கடன் வாங்குதல்




- **வரவு/செலவு திட்டமிடுதல் மற்றும் சேமிப்பு :** எதிர்காலத்திற்கான வரவு செலவைத் திட்டமிடுவதையே வரவு/செலவு திட்டம் (பட்ஜெட்) எனலாம். அதை வழிகாட்டியாகக் கொண்டு செலவு மற்றும் சேமிப்பைத் திட்டமிடலாம். ஒவ்வொரு குடும்பமும் வரவு மற்றும் செலவிற்கான பட்ஜெட்டைத் தயாரித்து, அதைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும். மாதாந்திர பட்ஜெட்டைத் தயாரித்துச் செலவுகளை அதற்குள் அடக்குவது சிறந்ததாகும். செலவுக்கு அதிகமாக வரவு இருப்பின் அது உபரி எனப்படும். இந்த உபரி வருவாய் சீரான முறையில் சேமிக்க அல்லது முதலீடு செய்யப்படவேண்டும். எதிர்பாராத நிகழ்வுகளை சந்திக்கவும் (உ-ம். விபத்து, இயற்கை சீற்றம், பணி இழப்பு..) அல்லது முக்கியமான பெரிய செலவுகளைச் (உ-ம்.திருமணம், குழந்தைகளின் கல்வி, பயணங்கள், வீடு, வாகனங்கள் வாங்குதல் போன்றவை) சமாளிக்கவும் இது உதவிடும். வேலை செய்யும் சக்தியை இழந்துவிட்ட காலத்தில் (ஓய்வு, முதுமை...) வாழ்க்கையை நடத்திட சேமிப்பு உதவியாக இருக்கும்.

- **சேமிப்பின் முக்கியத்துவம் :** நாம் செலவழிப்பதற்கு முன்னதாக வருவாயில் ஒரு பகுதியையாவது சேமிக்க வேண்டும். முதலாவதாக, நமது சேமிப்பு பாதுகாப்பான உபகரணங்கள் வடிவில் அல்லது பாதுகாப்பான நிறுவனங்களில் இருக்க வேண்டும். உதாரணமாகப் பாடுபட்டு நீங்கள் சேமித்த பணத்தை அதிகமான இடர்வரவுடைய/நெறிப்படுத்தப்படாத நிறுவனங்களில் முதலீடு செய்தால் உங்கள் சேமிப்பை நீங்கள் இழக்க நேரிடலாம். ஆகவே பாதுகாப்பான உபகரணங்கள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் சேமித்து வைப்பது அவசியமாகும். இரண்டாவதாக என்பது திட்டமிட்ட அல்லது எதிர்பாராத செலவுகளை சமாளிக்கவே பணத்தை சேமிக்கிறோம். எனவே, உங்களுக்குத் தேவைப்படும் நேரத்தில் பணத்தை எடுத்துக்கொள்ள முடியும் வகையில் உள்ள உபகரணங்கள்/நிறுவனங்களில் சேமித்து வைப்பது சிறந்தது. மூன்றாவதாக, பண வீக்கத்திலிருந்து பாதுகாப்பளிக்கும் வகையில் செய்திருக்கும் சேமிப்பிலிருந்து வருவாய் கிடைக்க வேண்டும்.



- **கடன் :** தினசரி செலவுகளை சமாளிப்பதற்காக இல்லாமல், வருங்காலத்தில் மதிப்புக் கூடும்படி உள்ள சொத்துக்களில் முதலீடு செய்வதற்கு கடன் வாங்க வேண்டும். இதற்கு உதாரணமாக வீடு வாங்க அதையே அடமானமாக வைத்துக் கடன் வாங்கலாம். குழந்தைகளின் உயர் கல்விக்குக் கடன் வாங்கலாம்.

- **வங்கியா/ அடகுக் கடையா :** எப்போதுமே அடகுக் கடையை விட வங்கியே சிறந்தது. ஏனெனில், அது இந்திய ரிசர்வ் வங்கியால் நெறிமுறைப்படுத்தப்படுகிறது. வங்கிகளின் செயல்பாடுகள் வெளிப்படையானவை, வட்டிக் கடைக்காரர் போல் அதிகமான கட்டணங்களை அவை வசூல் செய்வதில்லை. வங்கிகள் ஆவணப்படுத்தப்பட்ட புகார் தீர்வு செயல்முறைகள் வங்கிகளால் பின்பற்றப்படுகின்றன.



# செய்தி 3

## உங்களது வைப்பு மற்றும் உங்களது வைப்பு கணக்குகளை அறிந்து கொள்ளுங்கள்.



- உங்களது பணத்தை, சேமிப்பு வங்கிக் கணக்குகளில் விட்டு வைக்காதீர்கள். அவைகள் உங்களுக்கு அதிக வருவாயைத் தருவதில்லை. ஒட்டுமொத்தமாகப் பணம் கிடைக்கும்பொழுது, அதனை நிரந்தர வைப்புகளில் போடுங்கள். மேலும் உங்களுக்கு அவ்வப்போது பணம் கிடைத்தால் தொடர் வைப்புக் கணக்குகளைத் தொடங்குங்கள்.

- உங்களது வங்கி கணக்குகள் மற்றும் உங்களது பொருட்களைப் பாதுகாப்பாக வைத்திட நம்பகமான ஒருவரை நீங்கள் நியமனம் செய்யவேண்டும். வங்கிக் கணக்கைத் தொடங்கும் சமயத்தில் நியமனப் படிவம் ஒன்றை நீங்கள் பூர்த்தி செய்ய வேண்டும். ஒரு நியமனதாரர் இருந்தால் உங்களது கேட்புகளுக்கு விரைவான தீர்வு அளித்து, உயிரோடிருக்கும் உங்கள் குடும்ப உறுப்பினர்களின் சிரமத்தைக் குறைத்திட உதவும். வங்கிகளுக்கான முக்கியமான செயல் உத்தரவுகளை வழங்குவதில் கீழ்கண்டவை உள்ளன. **மற்றவர் அல்லது உயிரோடிருப்பவர், முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர், இணைந்த கணக்கு** ஆகியவை ஆகும்.

- தேவை ஏற்பட்டால், முதிர்வடையாமல் இருந்தாலும்கூட உங்களது நிரந்தர/கால வைப்புகளிலிருந்து பணத்தை எடுத்துக் கொள்ளலாம். அவ்வாறு முதிர்வடையாமல் பணத்தை எடுக்க, நாம் வங்கியில் வைப்பை செலுத்தும்போது அந்த விருப்பத்தை தெரிவித்துவிடவேண்டும்.





- ஓய்வூதியம் பெறுவதற்கு, ஏற்கனவே உள்ள சேமிப்புக் கணக்கை, ஓய்வூதியதாரர் பயன்படுத்திக்கொள்ளலாம். உங்களது துணைவி/துணைவருடன் நீங்கள் ஒரு இணைந்த கணக்கைத் தொடங்கி, உங்கள் கணக்கை செயல்படுத்துவதற்கான உத்தரவை **“மற்றவர் அல்லது உயிரோடிருப்பவர்”** அல்லது “முன்னவர் அல்லது உயிரோடிருப்பவர்” என்று நியமனதாரர் பெயருடன் பதிவு செய்துகொள்ளலாம். தேவைப்பட்டால், உங்கள் ஓய்வுதியக் கணக்கை மற்றொரு வங்கி அல்லது மற்றொரு கிளைக்கு மாற்றிக் கொள்ளலாம்.

- ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதத்தில் உயிர்வாழ் சான்றிதழை உங்கள் வங்கிக் கிளைக்குச் சமர்ப்பிக்க மறந்திடாதீர்கள். காகித வடிவிலான “உயிர்வாழ் சான்றிதழ்”க்குப் பதிலாக, நீங்கள் **“ஜீவன் பிரமாண்”** என்னும் கணினி வழி உயிர்வாழ் சான்றிதழைச் சமர்ப்பிக்கலாம். இதில் ஆதார் எண் அடிப்படையிலான பயோ மெட்ரிக் அங்கீகாரம் உள்ளது. www.jeevanpramaan.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று கைபேசியின் மூலமும் உயிர்வாழ் சான்றிதழை அனுப்பலாம்.



# செய்தி 4

## கடன்களை உரிய நேரத்தில் திருப்பி செலுத்தி நல்ல கடன் மதிப்பெண்ணை பராமரிக்கவும்




- புத்திசாலித்தனமாக கடன் வாங்கி அதனைத் திருப்பிச் செலுத்தும் சக்தி உங்களுக்கு உள்ளதா என்பதைப் பார்த்துக் கொள்ளவும்.
- திருப்பிச் செலுத்துவதற்கான எந்த ஒரு தவணையையும் தவற விடக்கூடாது என்பதை உறுதி செய்து கொள்ளவும்.
- வங்கிகள் உங்களுக்கு வேறோரு கடன் தரும் நேரத்தில் உங்களது கடன் மதிப்பெண் மற்றும் கடன் வரலாறு ஆகியவற்றை பார்க்கின்றன.
- வங்கியின் கடனைத் திருப்பிச் செலுத்துவதிலும் தீர்வு அளிப்பதிலும் தாமதம் ஏற்படுமேயானால், உங்களது கடன் வரலாறு / கடன்மதிப்பெண் ஆகியவற்றில் பாதிப்பை ஏற்படுத்தும். தாமதம் ஏதேனும் இருந்தால் வங்கியாளரிடம் தெரிவிக்கவும்.
- கடனை எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக அடைத்துவிடுங்கள். இதனால் உங்களுக்கு நல்ல கடன் வரலாறு ஏற்படும். இதன் மூலம் எதிர்காலத்தில் தனிப்பட்ட / வர்த்தக நோக்கங்களுக்காக மேலும் கடன்களைப் பெற முடியும்.
- உங்களது கடன் வரலாறு மற்றும் அது தொடர்பான அம்சங்களால் உங்களுக்கு நல்ல கடன் மதிப்பெண் கிடைக்கும். அதிக மதிப்பெண் என்றால், நீங்கள் ஒரு நல்ல கடன் நம்பகத்தன்மை உடைய பொறுப்பான கடன் வாங்குபவராக இருக்கிறீர்கள்.







# செய்தி 5

## கேட்பு வரைவோலைகள் மற்றும் காசோலைகளுக்கு விடை கொடுங்கள். மின்னணு வசதி மூலம் பணத்தை பெறுவதையும் மாற்றுவதையும் தொடங்குங்கள்

➢ **தேசிய மின்னணு நிதிமாற்றம் – நெப்ஃட்** (National Electronic Fund Transfer - NEFT) :


நாட்டின் எந்த மூலையிலிருந்தாலும் சில மணி நேரங்களில் பணத்தை அனுப்ப முடியும். வார நாட்கள் மற்றும் வேலை நடைபெறும் சனிக்கிழமைகளில் நெஃப்ட் காலை 8.00 மணியிலிருந்து மாலை 7.00 மணிவரை செயல்படும்.



➢ **நிகழ்நேர மொத்தத் தீர்வு** (Real Time Gross Settlement - RTGS) :

நீங்கள் உடனே பணம் அனுப்பவேண்டிய தேவை ஏற்பட்டால், அதுவும் ரூ.2 லட்சம் அல்லது அதற்கு அதிகமாக இருந்தால், நீங்கள் ஆர்.டீ.ஜி.எஸ். முறையைப் பயன்படுத்தலாம்.

வார நாட்கள் மற்றும் வேலை நடைபெறும் சனிக்கிழமைகளில் ஆர்.டீ.ஜி.எஸ் காலை 8.00 மணியிலிருந்து மாலை 4.30 மணி வரை செயல்படும்.



➢ **உடனுக்குடன் பணம் அளிக்கும் சேவை** (Immediate Payment Service - IMPS) :

உடனே பணத்தை அனுப்பிவிட "உடனடி பணம் அனுப்பும் சேவையைப்" (IMPS) பயன்படுத்தவும். ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் விடுமுறை நாட்களிலும்கூட, வாரத்தின் 7 நாட்களிலும் 24 மணி நேரமும் பணத்தை அனுப்ப முடியும்.

உங்கள் வங்கி அளிக்கும் இணையதள வங்கிசேவை மற்றும் அலைபேசி வங்கி சேவை போன்ற கணினி வழி முறைகளின் மூலமாகவோ அல்லது வங்கிக் கிளை வழியாகவோ, நெப்ஃட், ஆர்.டீ.ஜி.எஸ் மற்றும் ஐஎம்பிஎஸ் ஆகியவைகளை பயன்படுத்தலாம்.

➢ **ஒருங்கிணைந்த பணம் அனுப்பும் வசதி** (Unified Payment Interface - UPI) :

பயனாளியின் வங்கிக் கணக்கு எண், ஐஎஃப்எஸ்சி (Indian Financial System Code - IFSC), ஏடிஎம் (ATM) பற்று (Debit) அட்டை எண் போன்ற விரிவான விவரங்கள் இன்றி, நேரடியாக மெய்நிகர் பணம் அளிக்கும் முகவரிக்கு (Virtual Payment Address) யுபிஐ (UPI) மூலம் விரைவாகவும், எளிதாகவும் பணத்தை அனுப்பவும்,பெறவும் முடியும்.

வங்கி விடுமுறை நாட்கள் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் உட்பட 24x7 நாட்களும் நீங்கள் பணம் அனுப்பமுடியும். யுபிஐயை ஒரு பணம் அளிக்கும் தேர்வாக ஏற்கும் வணிகர்களுக்கு நீங்கள் பணம் அனுப்ப முடியும்.

உங்களது ஸ்மார்ட் போனில் யுபிஐ செயலியை (APP) தளவிறக்கம் செய்து பயன்படுத்தவும்.



# செய்தி 6

## உங்கள் வாயிற்படியில் அல்லது
## உங்கள் வீட்டின் அருகாமையில் வங்கி சேவைகள்

- உங்களின் வங்கித் தேவைகளுக்காக வங்கிக்குப் போகவேண்டிய அவசியமில்லை. வர்த்தகத் தொடர்பாளர் என்பவர் வங்கி நியமித்த முகவர் ஆவார். உங்கள் பகுதிக்கு வர்த்தக தொடர்பாளர் வசதி உள்ளதா என்பதை உங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள வங்கி கிளையைத் தொடர்பு கொண்டு அறியவும். PMJDY இணையதளத்தில் http://pmjdy.gov.in/gis என்ற இணைப்பில் சென்று உங்கள் பகுதியிலுள்ள வங்கித் தொடர்பாளர்கள் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.


- தனிநபர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள் சமூகநல நிறுவனங்கள், அஞ்சலகங்கள், தொடக்கநிலை விவசாயக் கடன் கூட்டுறவு நிறுவனங்கள், குறுநிதி நிறுவனங்கள், வங்கிசாரா நிதி நிறுவனங்கள், பணம் அளிக்கும் வங்கிகள், ஆகியவற்றில் எவற்றையும் வர்த்தகத் தொடர்பாளர்களாக நியமிக்கலாம்.

- மடிக்கணினி, கையடக்கக் கருவி அல்லது கைபேசி ஆகியவற்றின் உதவியோடு வர்த்தகத் தொடர்பாளர் உங்களை வங்கியுடன் தொடர்புபடுத்திட உதவிடுவார்.

- உங்களுக்கு ஏதேனும் சந்தேகமிருப்பின், வங்கியுடன் தொடர்புகொண்டு வர்த்தகத் தொடர்பாளரின் பெயர் மற்றும் இதர தகவல்களைப் பெற்று உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

- வர்த்தகத் தொடர்பாளர் உதவியுடன், வங்கிக் கணக்கை நீங்கள் தொடங்கலாம். வங்கி கணக்கில் பணம்போடலாம், எடுக்கலாம், கடனுக்கு விண்ணப்பிக்கலாம், சிறு காப்பீடு வசதி பெறலாம். கணக்கிலிருந்து பணமாற்றம் (எடுத்தல்-கணக்கில் வரவு செய்தல்) செய்யலாம்.

- வர்த்தகத் தொடர்பாளரின் சேவையில் திருப்தி இல்லையென்றால் வங்கியிடம் புகார் தெரிவிக்கலாம்.






# செய்தி 7

## வங்கிகள் மற்றும் வங்கிக் குறைதீர்ப்பாளரிடம் உங்களது புகார்களை எப்படி அளிப்பது?




- வங்கியின் கிளையில் புகார் பதிவேட்டில் உங்களது புகாரைப் பதிவு செய்யவேண்டும். அங்கு பதிவேடு இல்லையென்றால் கேட்டுப்பெற்று பூர்த்தி செய்யவும். அல்லது கணினி வழியாக பூர்த்தி செய்யவும்.
- புகார்களைத் தீர்த்துவைக்க தொடர்பு கொள்ளவேண்டிய அதிகாரிகளின் பெயர்கள் வங்கியின் அறிவிப்புப் பலகையில் இல்லையென்றால் கேட்டுப் பெறவும்.




- உங்களது புகார் குறிப்பிட்ட காலவரம்பிற்குள் தீர்த்து வைக்கப்படவேண்டும். இல்லையென்றால், வங்கி அதற்கான காரணங்களை அளிக்கவேண்டும்.
- ஒரு மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட வங்கி உங்களது புகார்களைத் தீர்த்து வைக்கவில்லையென்றால், இந்திய ரிசர்வ் வங்கியின் குறைதீர்ப்பாளரை அணுகலாம். எந்தவித கட்டணமும் இன்றி இந்திய ரிசர்வ் வங்கியின் வங்கிக் குறைதீர்ப்பாளர் திட்டம் உங்களது புகாரை விரைவாகத் தீர்த்து வைக்கின்றது.




- இந்திய ரிசர்வ் வங்கி நாட்டின் 15 இடங்களில் உயர் அதிகாரிகளை வங்கிக் குறை தீர்பாளர்களாக நியமித்துள்ளது. வங்கிகளின் சேவைகளில் பல்வேறு குறைபாடுகளுக்கான தீர்வை அளிப்பதில் வங்கிக் குறைதீர்ப்பாளர் திட்டம் முனைகிறது.
- ஒரு வெள்ளைத் தாளில் உங்கள் புகாரை எழுதி அனுப்பலாம் அல்லது கணினி வழியாகவும் அல்லது மின்னஞ்சல் மூலம் உங்கள் புகார்களை அனுப்பலாம். உங்களது புகாரை https://bankingombudsman.rbi.org.in எனும் இணையதளத்திலும் பதிவு செய்யலாம்.







# செய்தி 8

## இலவசமாக எதுவுமே கிடைக்காது - ஏமாறாதீர்கள்

- இந்திய ரிசர்வ் வங்கி / இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநரிடமிருந்து வருவதாகவும், அல்லது வேறு வங்கிகள் மற்றும் உங்களது வங்கி உட்பட, பணம் தருவதாக, உங்களுக்கு வரும் மின்னஞ்சல் / குறுஞ்செய்தி / தொலைபேசி அழைப்புகள் ஆகியவற்றை நம்பி ஏமாறாதீர்கள்.

- இந்திய ரிசர்வ் வங்கி அல்லது வேறு ஏதேனும் வங்கிகள், அல்லது அரசு நிறுவனங்களிடமிருந்து (உள்நாடு/வெளிநாடு) வரும் போலியான மின்னஞ்சல்கள், லாட்டரியில் பரிசு விழுந்ததாக வரும் செய்திகள், குறைந்த செலவில் அதிகப் பணம் ஆகியவற்றிற்கு இரையாகி விடாதீர்கள்.

- எவரிடமிருந்தாவது அல்லது மேற்குறிப்பிட்ட எந்தவொரு பிரபல நிறுவனத்திடமிருந்தாவது அதிகமான பணம் பெறும்பொருட்டு, எவருக்கும் பணத்தை முதல்கட்ட வைப்பு, தரகு, மாற்றுக் கட்டணம் என்ற பெயரில் அனுப்புவதற்கு முற்படாதீர்கள். நீங்கள் ஏமாற்றப்படுவீர்கள்.




- இந்திய ரிசர்வ் வங்கி தனி நபர்களுக்கு சேமிப்பு / நடப்புக் கணக்குத் தொடங்குதல், கடன் / பற்று அட்டை வழங்குதல் போன்ற எந்தவித பரிவர்த்தனைகளிலும் ஈடுபடுவதில்லை.

- இந்திய ரிசர்வ் வங்கி / வங்கிகள் உங்களின் வங்கிக் கணக்கு எண், கடன் / பற்று அட்டை விவரங்களை மின்னஞ்சல் / குறுஞ்செய்தி அல்லது தொலைபேசி மூலம் ஒரு போதும் கேட்காது. எவரிடமும் இத்தகைய விபரங்களைத் கொடுக்காதீர்கள்.

- உங்களின் வங்கிக் கணக்கு விவரங்கள், இணையதள வங்கி ID பாஸ்வோர்டு, கடன் / பற்று அட்டை எண் - Card Verification Value (CVV) அல்லது ஒருமுறை பெறப்படும் கடவு சொல்- One Time Password (OTP) எண்ணை எவரிடமும் தெரிவிக்காதீர்கள்.


- லாட்டரி பரிசு விழுதல், உள்நாட்டிலிருந்து / வெளிநாட்டிலிருந்து மலிவாகப் பணம் ஆகியவை உங்களுக்குக் கிடைத்துள்ளதாகப் போலியான அழைப்புகள் வந்தால், உடனடியாக அருகிலுள்ள காவல் நிலையம் அல்லது இணையதள (சைபர்) குற்றப்பிரிவினைத் தொடர்பு கொண்டு புகார் செய்யுங்கள்.



# செய்தி 9

## சிக்கலின்றி தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (ATM) பயன்பாட்டுக்கு கீழ்க்கண்டவைகளை கவனத்தில் கொள்ளுங்கள்

- உங்களது ஏடிஎம்மில் (ATM) பணம் எடுக்கலாம், செலுத்தலாம், தற்போதைய கணக்கு நிலுவை பற்றி அறியலாம், அலைபேசி மூலம் வங்கி சேவையை பெறுவதற்கு பதிவு செய்யலாம், பில்கள் மற்றும் கட்டணங்களுக்குப் பணம் அளிக்கலாம், வங்கிக் கணக்கோடு ஆதார் எண்ணை இணைக்கலாம்.





- உங்களது ஏடிஎம் அட்டை விவரங்கள் மற்றும் தனி நபர் அடையாள எண். - Personal Identification Number (PIN) எண்ணை எவரிடமும் சொல்லாதீர்கள். எக்காரணம் கொண்டும் அட்டையை ஏடிஎம்மில் விட்டுச் செல்லாதீர்கள்.

- நீங்கள் உங்களது அட்டையை தேய்த்து எடுக்கும்போதோ (Swipe) அல்லது பின் எண்ணைப் போடும் போதோ, புகைப்படக் கருவிகள் அல்லது மற்ற அத்தகைய சாதனங்கள் ஏடிஎம் அறையில் இல்லாதிருப்பதை உறுதி செய்துகொள்ளுங்கள். முடிந்தவரை பின் நம்பரைப் போடும்பொழுது ஒருகையால் அழுத்தி மறுகையால் மறைத்துக் கொள்ளவும். நீங்கள் பின் நம்பர் அழுத்தும்பொழுது, வேறு யாரும் பார்க்கும் வகையில் செய்யாதீர்கள்.

- வெளிவந்த கரன்சி நோட்டுக்களை எண்ணி, சோதித்து பார்த்து எடுக்கவும்.

- உங்கள் அட்டை தொலைந்து போனாலோ அல்லது திருடப்பட்டாலோ அல்லது வேறு யாரும் பிரச்சனை செய்கிறார்கள் என்று அறிந்தாலோ உடனே உங்களது வங்கியைத் தொடர்பு கொண்டு அட்டை உபயோகத்தைத் தடை செய்யவும்.




- உங்களது ஏடிஎம் தொடர்பாக புகார் இருந்தால், அட்டை அளித்த வங்கிக்கு எழுதவும். புகாரைப் பெற்ற 7 வேலை நாட்களுக்குள் வங்கி அந்தப் புகாருக்குத் தீர்வு அளிக்கவேண்டும். இல்லாவிட்டால் தாமதமாகும் ஒவ்வொரு நாளுக்கும் ரூ.100/- நஷ்டஈடு அளிக்கவேண்டும். (பரிவர்த்தனை நடந்து 30 நாட்களுக்குள் புகார் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்)

- உங்களது ஏடிஎம் அட்டையின் பின் (PIN) எண்ணை சீரான இடைவெளியில் அவ்வப்போது மாற்றவும்.

- அட்டையை உபயோகப்படுத்தும் முன் ஏடிஎம் அறை அல்லது ஏடிஎம் இயந்திரத்தில் ஏதேனும் சந்தேகப்படும்படியான செயல் அல்லது பொருள்/கருவி உள்ளதா என்பதைச் சோதித்துக் கொள்ளவும்.



# செய்தி 10

## பாடுபட்டு சம்பாதித்த பணத்தை, அரசுகளிடம் பதிவு பெற்ற அமைப்புகளில் மட்டுமே முதலீடு செய்யவும்.

- நீங்கள் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை இந்திய ரிசர்வ் வங்கி, செபி (SEBI), இர்டா (IRDA), பிஎஃப்ஆர்டிஏ (PFRDA) அல்லது மாநில அரசுகளிடம் பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்புகளில் வைப்பு அல்லது முதலீடு செய்து பாதுகாக்கவும். அந்த அமைப்புகள் பற்றிய பட்டியலை www.sachet.rbi.org.in என்ற இணையதளத்தில் காணலாம்.

- குறுகிய காலத்தில் அதிக வட்டி தருவதாக உறுதியளிக்கும் திட்டங்களைக் கண்டு ஏமாறாதீர்கள். அத்தகைய திட்டங்கள் மோசடித் திட்டங்களாகும். உங்களிடம் பணத்தை வாங்கிக்கொண்டு நிறுவன நிர்வாகிகள் மறைந்து விடுவார்கள்.

- வர்த்தக வங்கிகளைவிட மிகக் குறைந்த வட்டியில் கடன் தருவதாகக் கூறும் நிறுவனங்கள், பரிசீலனைக் கட்டணம் வாங்கியவுடன் மறைந்து விடுவார்கள்.

- எந்த ஒரு திட்டத்திலும் உங்களது வைப்பு அல்லது பணத்தைத் திருப்பிப் பெறுவதில் பிரச்சினை இருந்தால், இது சம்பந்தமான தகவல் பெற அல்லது புகார் அளிக்க www.sachet.rbi.org.in என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.






# செய்தி 11

## தவறான விற்பனை - பணத்தை உங்கள் கணக்கில் வரவு வைக்க நீங்கள் வங்கிக்குச் செல்லும்பொழுது, உங்களுக்குப் புரியாத காப்பீட்டுத் திட்டத்தை உங்கள் கையில் கொடுத்தால் ...


- நிரந்தர வைப்பு செய்ய நீங்கள் வங்கிக்குச் சென்றபொழுது, காப்பீட்டுத் திட்டம் எதுவும் உங்கள் கைகளில் கட்டாயமாக வழங்கப்பட்டதா?

- உங்களுக்குத் தேவைப்பட்டால் மட்டுமே, காப்பீட்டுத் திட்டத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்குத் தேவை இல்லையென்றால் வங்கி உங்களை வற்புறுத்த முடியாது.


- எந்த ஒரு படிவத்திலும் கையெழுத்திடுமுன், சில நிமிடங்கள் எடுத்துக்கொண்டு, அதனை படித்துப் பார்க்கவும்.

- நீங்கள் கேட்காத ஒரு பொருளை வாங்கும்படி வங்கி உங்களிடம் முயற்சித்தால், உங்களுக்குத் தேவையாகவோ அல்லது பொருந்தும்படியாகவோ இல்லாவிட்டால், வாங்க வேண்டாம்.

- உங்களது வங்கி, ஒரு நிதிப்பொருளை உங்களிடம் தவறுதலாக விற்றுவிட்டதாக நீங்கள் கருதினால், உங்கள் புகாரை பதிவு செய்ய தயங்க வேண்டாம்.







भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA